07.03.2026

# செறிவூட்டப்பட்ட அரிசி நிறுத்தம்

**விநியோகம் நிறுத்தம்**

- திட்டத்தில் தவறு நிகழ்ந்துள்ளதை உணர்ந்து நாடு முழுவதும் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை மத்திய அரசு இடைக்காலமாக நிறுத்திவைத்துள்ளது.

- செறிவூட்டப்பட்ட அரிசியை நீண்ட நாள்களுக்கு கிடங்குகளில் சேமித்து வைப்பதால் நாளடைவில் அதில் கலக்கப்பட்டுள்ள நுண்ணூட்டச் சத்துகளின் வீரியம் குறைந்து விடுகின்றன.

- அதனால் உறுதியளிக்கப்பட்டபடி மக்களுக்கு நுண்ணூட்டச்சத்து குறைபாடு நீங்கிவிடும் என்று கருத முடியாது என ஆய்வுகள் தெரிவித்ததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**அரிசி**

- அரிசியை மாவாக்கி அதனுடன் இரும்பு, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி12 ஆகிய நுண்ணூட்டச் சத்துகளைச் சேர்த்து அதை மீண்டும் இயந்திரங்கள் மூலம் அரிசிபோல உருவாக்கி அந்த செறிவூட்டப்பட்ட அரிசி ஒரு கிலோவை 100 கிலோ சாதாரண அரிசியுடன் கலந்து தயாரிக்கப்படுவதுதான் செறிவூட்டப்பட்ட அரிசி.

**2022**

- நாடு முழுவதும் கடந்த 2019-21-க்கு இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பின் போது பல்வேறு வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களிடம் ரத்த சோகை ஒரு பிரச்சனையாக இருப்பது தெரியவந்தது.

- 2022-ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் செறிவூட்டப்பட்ட அரிசியை பல்வேறு நலத் திட்டப் பயனாளிகளுக்கு பொது விநியோகத் திட்டத்தின்மூலம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

**தலசீமியா**

- மத்திய அரசு சுமார் ரூ.17,000 கோடி செலவில் அமல் படுத்திய இந்தத் திட்டம் முடிவடைய இன்னும் 3 ஆண்டுகள் உள்ள நிலையில் இப்போது நிறுத்தப்பட்டுள்ளது.

- தலசீமியா, 'கிக்கில் செல்' போன்ற நோய் உள்ளவர்கள் உடலில் அதிகப்படியான இரும்புச் சத்து சேர்ந்தால் மேலும் பாதிப்பு ஏற்படலாம் என நீதிஆயோக் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் அளித்த ரகசிய அறிக்கை இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

- திட்டம் முன்னோடியாகச் செயல்படுத்தப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது செறிவூட்டப்பட்ட அரிசியின் தரம், சுவை, அமைப்பு, தோற்றம் ஆகியவற்றில் குறைபாடு இருப்பது தெரியவந்துள்ளது.

- ஆதலால், திட்டம் வெற்றிகரமாக அமையவில்லை.

- சில இடங்களில் அடிப்படையிலேயே கோளாறு நிகழ்ந்துள்ளது என நீதி ஆயோக் அரசுக்கு சுட்டிக்காட்டியதாகத் தெரிகிறது.

- அது மட்டுமல்லாமல், அரிசியில் கலக்கும் நுண்ணூட்டச் சத்துகளை தயாரிக்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் ஆண்டுக்கு சுமார் ரூ.1,800 கோடி மதிப்புள்ள அந்தச் சந்தையைக் கைப்பற்ற பல முறைகேடான வழிகளில் அழுத்தம் கொடுப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

**பிளாஸ்டிக் அரிசி**

- மலைப் பிரதேசங்களில் விநியோகம் செய்யப்பட்ட செறிவூட்டப்பட்ட அரிசியை பிளாஸ்டிக் அரிசி எனக் கூறி அச்சமடைந்து, அதை அந்த மக்கள் உண்ண மறுத்ததாகச் செய்திகள் வந்தன.

- எல்லாவற்றுக்கும் மேலாக, ரத்த சோகை குறைபாட்டைப் போக்க செறிவூட்டப்பட்ட அரிசி குறிப்பிட்ட அளவுக்கே பலன் தரும் என்றும், முழுமையான பலனைத் தராது என்றும் நிபுணர்கள் எச்சரித்தனர்.

- மக்களின் உணவுப் பழக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி பலதரப்பட்ட உணவுகளைச் சாப்பிடுமாறு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே பயனுள்ள நல்லதொரு தீர்வாக அமையும் என்று வலியுறுத்தினர்.

SURESH'


TUTICORIN 99445 11344 | TIRUNELVELI 98942 41422 | RAMANATHAPURAM 75503 52916 | MADURAI 98431 10566 | CHENNAI 97555 52003 | COVAI 90433 10773 | TENKASI 98840 51717

- செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்திலும் சில மாநில உயர்நீதிமன்றங்களிலும் வழக்குகள் தொடரப்பட்டன எனினும், செறிவூட்டப்பட்ட அரிசியால் குறிப்பிடத்தக்க உடல்நல பாதிப்பு எதுவும் இல்லை என்றும், இதுவே ரத்த சோகைக்கு தீர்வுகாண சிக்கனமான திட்டம் என்பதால் மத்திய அரசு தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து திட்டத்தை அறிவித்து நிறைவேற்றியது.

## வாராந்திர நடப்பு நிகழ்வுகள்

**தமிழகம்**

- பெண்களுக்கு பாதுகாப்பான நவீன கருத்தடை சாதனமாக 'இம்பிளானன் என்.எக்ஸ்டி', தமிழகத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

**இந்தியா**

- கேரள மாநிலத்தின் பெயரை 'கேரளம்' என மாற்றம் செய்ய மத்திய மந்திரிசபை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- புதுடெல்லியில் சாலை விபத்தில் சிக்குபவர்களை 1 மணி நேரத்துக்குள் மருத்துவமனையில் சேர்க்கும் நபருக்கு டெல்லி அரசு ரூ.25 ஆயிரம் பரிசு வழங்க உள்ளது.
- இது தொடர்பாக மத்திய அரசின் 'ரஹ்-வீர்' திட்டத்தை தலைநகரில் செயல்படுத்த உள்ளதாக டெல்லி அரசு அறிவித்துள்ளது.
- விபத்தில் காயம் அடைந்தவர்களை காப்பாற்ற முதல் 1 மணி நேரம் கோல்டன் ஹவர் என்று அழைக்கப்படுகிறது.

**உலகம்**

- இஸ்ரேல் அரசின் உயரிய விருதான நெசெட் பதக்கம் பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.

**அறிவியல்**

- வானில் பறந்து செல்லும் இந்தியாவின் முதல் மின்சார 'ஏர் டாக்சி' யை உருவாக்குவதற்காக, உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான 'என்விடியா' உடன் சென்னையைச் சேர்ந்த 'தி இ-பிளேன்' எனும் வான்போக்குவரத்து ஸ்டார்ட் - அப் நிறுவனம் ஒப்பந்தம் மேற்கொண்டது.

**பொருளாதாரம்**

- நாடு முழுவதும் வருகிற ஏப்ரல் 1-ந் தேதி முதல், 20 சதவீத எத்தனால் கலந்த 'இ20' ரக பெட்ரோலை குறைந்தபட்சம் 95 ஆக்டேன் தரத்தில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று மத்திய அரசு கட்டாயமாக்கியுள்ளது.
- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வரும் 2026-27 நிதியாண்டில் 6.8 சதவீதம் முதல் 7.2 சதவீதம் வரை இருக்கும் என்று இ.ஒய்.எகானமி வாட்ச் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SURESH'